முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட பாகோடு பேரூராட்சி, பாளையங்கட்டியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்–2–ன்கீழ் இயங்கும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் வழங்கு குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. அதனால் சாணிவிளை, கடந்தான்கோடு, சரல்விளை போன்ற பகுதிகளில் குடிநீர் விநியோகம் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. எனவே, அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் வழங்கு குழாய்களைப் புதிதாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பேரூராட்சியிலே துறை அதிகாரிகளால் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, அவசியமிருப்பின், கண்டிப்பாக மாற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***16652—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2019 ஜனவரி 7]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதி கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். இந்தப் பகுதி முழுவதும் விவசாயத்தைச் சார்ந்த பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சிறுபான்மையின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். எனது தொகுதியைச் சார்ந்த மாணவ, மாணவிகள் நீண்டதூரம் அதாவது சுமார் 50 முதல் 80 கிலோ மீட்டர் தூரம் வரை பயணம் செய்துதான் உயர் கல்வியைப் பெற வேண்டியுள்ளது. குறைந்த கட்டணத்தில் உயர் கல்வியைப் பெறுவதற்கு, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாக துறையூர் தொகுதி இருப்பதாலும், மாவட்ட தலைநகரான திருச்சிக்குச் சென்று உயர் கல்வியைப் பயில வேண்டிய சூழ்நிலை உள்ளது. 2018–2019 ஆம் கல்வியாண்டில் மட்டும் துறையூர் தொகுதியில் 12 ஆம் வகுப்பில் 11 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 900 மாணவ, மாணவிகளும், 7 அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 1,330 மாணவ, மாணவிகளும், 7 தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் 1,570 மாணவ, மாணவிகளும் ஆக மொத்தம் 3,800 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இதில் 55 சதவிகிதம் மாணவிகள் அதாவது 2,090 பேரும், 45 சதவிகிதம் மாணவர்கள் அதாவது 1,710 பேரும் பயில்கின்றனர். மாணவர்கள் உயர் கல்வியைப் பயின்று பசுமையான அறிவை வளர்த்துக் கொண்டு பட்டதாரி ஆவதற்கு அரசுக் கல்லூரிகள் இல்லை. எனவே, இந்த அரசு கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த மக்களின் பிள்ளைகள் 12 ஆம் வகுப்பிற்கு மேல் இடைநிற்றலை -* dropout-*ஐ தவிர்ப்பதற்கு எனது தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், துறையூர் தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். துறையூர் தொகுதி அமைந்திருக்கக்கூடிய திருச்சி மாவட்டத்தில் ஏற்கெனவே 3 அரசு கல்லூரிகளும், பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியாக இருந்து அரசுக் கல்லூரியாக மாற்றப்பட்ட 2 கல்லூரிகளும், அரசு நிதியுதவி பெறும் 9 கல்லூரிகளும், 17 சுயநிதி கல்லூரிகளும் என ஒட்டுமொத்தமாக 31 கல்லூரிகள் இருக்கின்றன. அந்த 31 கல்லூரிகளில் இன்றைக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் முழுவதும் பூர்த்தியடைந்திருக்கின்றனவா என்று பார்த்தோமென்றால், அவை முழுவதும் பூர்த்தியாகவில்லை. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகள் இரண்டிலும் சேர்த்து ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 4,088. அவற்றில் இன்றைக்கு காலியாக உள்ள இடங்கள் 552. அதேபோல, அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகளிலே ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 7,101. அவற்றில் 731 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆக, ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இன்றைக்கு மாணாக்கர்களுடைய சேர்க்கை, சுயநிதிக் கல்லூரிகளைக் கணக்கில் எடுக்காமலேயே 1,283 இடங்கள் காலியாக இருக்கின்றன. வருங்காலங்களில், அந்தப் பகுதியிலே மாணவர்களுடைய சேர்க்கை அதிகரிக்கும்பட்சத்தில் அரசு இதுகுறித்து பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

முற்பகல் 10—25

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதி, துறையூர் நகரில் சர்வே எண் 276/2, 3, 4, 5, 6, 7, அதேபோல், 277/1 முதல் 7 வரை 18 ஏக்கர் கட்டடத்துடன்கூடிய இடமும், அதேபோல் துறையூர் காலிப்பட்டியில் 50 ஏக்கர் காலி அரசு புறம்போக்கு நிலமும் உள்ளது.

2019 ஜனவரி 7]

கிராமப்புற மாணவர்கள், காலையில் தங்களது பெற்றோர்களுக்கு விவசாயப் பணிகளில் உதவி புரிகின்றனர். அதன்பிறகு, நீண்டதூரம் பயணம் செய்து உயர் கல்வி பயில்கின்றனர். எனவே, இந்த ஆண்டே இந்தத் தொகுதியிலே மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியோ அல்லது இருபாலர் கல்லூரியோ அல்லது உறுப்புக் கல்லூரியோ துவங்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். 2011–ல் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்திலே கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மட்டும் 45 கல்லூரிகளை தோற்றுவித்திருக்கிறார்கள். அதன்பிறகு அம்மா அவர்களுடைய வழியிலே ஆட்சி செய்யக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியிலே 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல் இந்த 7 ஆண்டுகளில் 1,585 புதிய பாடப் பிரிவுகளும் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. ஆக, மாணவர்கள் எவ்வித தங்குதடையுமின்றி உயர் கல்வி பெறுகின்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்த காரணத்தினால்தான், இன்றைக்கு இந்திய அளவிலே, உயர் கல்வியிலே 48.6 சதவிகிதம் என்ற தேர்ச்சி விகிதத்துடன் முதன்மை இடத்தை தமிழகம் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற மாணவர்களின் சேர்க்கைக்காக அந்தக் கல்லூரிக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 20 சதவிகித மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கின்ற வகையிலேயும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையிலே இன்றைக்கு உயர் கல்வி பெறுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை எந்தவிதத்திலும் குறையாமலும், பாதிப்பு ஏற்படாத வகையிலேயும் அரசானது கண்காணித்துக்கொண்டிருக்கிறது. எதிர்வரக்கூடிய காலக்கட்டங்களில் அவர் குறிப்பிட்டதுபோல,

கிராமப் பகுதிகளிலே புதிய கல்லூரியைத் தொடங்குவதற்கு 5 ஏக்கர் நிலமும், கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் தொடரும் செலவினமாகவும், தொடரா செலவினமாகவும் தேவைப்படுகின்ற சூழ்நிலையில், அரசானது அதுகுறித்து மீண்டும் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை முதற்கண் வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் நல்லாசியோடு சிறப்பாக ஆட்சி புரிந்து, பொங்கல் பரிசாக ரூ.1,000/– ரொக்கத்தை தாயுள்ளத்தோடு வாரி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்கள் தொகை அதிகம் நிறைந்த பகுதியாகும். அங்கு வாழ்கின்ற மக்கள் பெரும்பாலும் விவசாயத்தையும், பட்டாசுத் தொழிலையுமே நம்பி வாழ்கின்றனர். அங்கு வாழ்கின்ற மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு எங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்கு ஓர் அரசு கலைக் கல்லூரியை அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, +2 முடித்த பிறகு மாணாக்கர்கள் உயர் கல்வியில் சேர வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையிலே தமிழகம் முழுவதும் எந்தெந்தப் பகுதிகளிலிருந்து விண்ணப்பங்கள் பெறப்படுகின்றனவோ அந்தப்

2019 ஜனவரி 7]

பகுதிகளையெல்லாம் ஆய்வு செய்து, அதன் அடிப்படையிலேதான் புதிய கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பகுதியிலே வரும் காலங்களில் மாணவர்களுடைய சேர்க்கைக்காக விண்ணப்பங்கள் அதிக அளவிலே இருக்குமேயானால் அதை மாண்புமிகு அம்மா அவர்களின் வழித்தொடரும் அரசானது பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

நியாய விலைக் கடை

***27443—டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், அருணாபேரி கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், அருணாபேரியில் தற்போது பகுதிநேர நியாய விலைக் கடை ஒன்று 182 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பகுதிநேர நியாய விலைக் கடை அருகிலுள்ள நாகல்குளம் தாய்க்கடையிலிருந்து பிரிக்கப்பட்டு செயல்படுகிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*